விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 148 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 02 வெள்ளிக்கிழமை (16.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## இனப் படுகொலை ஆதாரமற்றவை என்றால் ஏன் சர்வதேச விசாரணைக்கு அச்சமடைகின்றீர்கள்?

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி



(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என அரசாங்கம் கருதினால் ஏன் அது சர்வதேச விசாரணைகளை எதிர்கொள்வது குறித்து இவ்வளவு தூரம் அச்சப்படுகின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்?

இலங்கைக்கான கனடாவின் தூதுவரை அழைத்து எதிர்ப்பு வெளியிட்டமை குறித்த வெளிவிவகார அமைச்சர் விஜித

15ஆம் பக்கம் பார்க்க

## உப்பு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

நாட்டில் உப்பு இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத்

15ஆம் பக்கம் பார்க்க

## பேரறிவாளனின் தாய் முள்ளிவாய்க்காலில் அஞ்சலி



(முல்லைத்தீவு)

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் இருந்து விடுதலை பெற்ற பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவுத் திடலில் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பிரித்தானியப் பாராளுமன்றத்தில்
# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்
### நீதியை நிலைநாட்டவும் வலியுறுத்தல்

(லண்டன்)

பிரித்தானியப் பாராளுமன்றத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் நீதியை நிலை நாட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என சபை உறுப்பினர்களால் வலியுறுத்தப்பட்டது.



(02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் ஏலம்
### ரூ.200 மில்லியன் வருமானம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் வாகனங்கள் ஏலம் மூலம் 200 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்ட நடவடிக்கையாக ஏலமிடப்பட்ட 26 வாகனங்களில், 17

15ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்களில் ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு விசாரணைப் பிரிவுகளை நிறுவ அனுமதி

(கொழும்பு)

ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுக்க அமைச்சு மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள விசாரணைப் பிரிவுகளை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுள் நிறுவுவதற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அனுமதி அளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் மாகாண ஆளுநர்களுக்கும் இடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஆளுநர்கள் இது தொடர்பில் கோரிக்கை

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மயானத்தில் அகழ்வுப் பணி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

அரியாலை செம்மணி சிந்துபாத்தி மயானத்தில், மனித எச்சங்கள் அவதானிக்கப்பட்ட பகுதிகளில் நேற்று வியாழக்கிழமை முதல் அகழ்வுப் பணிகள் ஆரம்

15ஆம் பக்கம் பார்க்க

## வரலாற்றில் முதல் தடவையாக பரீட்சைகள் ஆணையாளராக பெண் ஒருவர் நியமனம்



(கொழும்பு)

நாட்டின் 11ஆவது பரீட்சைகள் ஆணையாளராக ஏ.கே.எஸ் இந்திகா குமாரி லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக

15ஆம் பக்கம் பார்க்க

## ஓமந்தையில் விபத்து: ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் நேற்று இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கண்ணதாசன் திவியன் (வயது-32) என்பவரே

15ஆம் பக்கம் பார்க்க

## ராஜபக்ஷ குடும்பம் இழைத்தது மனித குலத்துக்கு எதிரான கொடூரமான குற்றங்கள்

### நினைவுத் தூபிக்கான எதிர்ப்பு அதற்கான கௌரவம் – பிரம்டன் மேயர் பட்ரிக் பிறவுண்



05ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசைவ உணவகத்துக்கு எதிராக நல்லூரில் கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர் முன் வீதியில் அமைந்துள்ள அசைவ உணவகத்துக்கு எதிராகக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகாக அசைவ உணவகமொன்று திறக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உடனடியாக மூடுமாறு வலியுறுத்தியும் நேற்று முன்தினம் புதன் கிழமை பஜனை வீதி ஊர்வலமொன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் (14) முற்பகல் 10 மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் வழிபாடுகளைத் தொடர்ந்து சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் தலைமையில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து சிறப்புப் பஜனை ஊர்வலம் சைவசமயத்தின் அடையாளமான நந்திக்கொடிகள் சகிதம் ஆரம்பமாகிப் பருத்தித்துறை வீதி வழியாக யாழ்.மாநகர சபையைக் கடந்து பின்னர் அதே வீதியின் மறுபக்கத்தால் புதிதாகத் திறக்கப்பட்ட அசைவ உணவகப் பகுதியைச் சென்றடைந்து தெய் வீக நாமப் பஜனை பாடப்பட்டதுடன் உரத்து அரோகராக் கோஷங்களும் எழுப்பப்பட்டன. (ம-4,7)

## கூடிய ஆசனம் பெறுபவர்களுக்கு ஆதரவு

# வவுனியாவில் தமிழ்க் கட்சிகள் இடையே எட்டப்பட்ட உடன்பாடு



வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் கூடிய ஆசனங்களை பெற்றுக்கொண்ட கட்சிக்கு மற்றையதரப்பு ஆதரவளிக்கும் வகையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணிக்கும், இலங்கை தமிழரசுக்கட்சிக்கும் இடையிலான கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா மாநகரசபையில் சங்கு கூட்டணி ஆட்சி அமைப்பதற்கு இலங்கை தமிழரசுக்கட்சி முழுமையான ஆதரவினை வழங்கும். அதேபோல வவுனியா தெற்கு, வடக்கு, செட்டிகுளம் பிரதேச சபைகளில் தமிழரசுக்கட்சி கூடிய ஆசனங்களை பெற்றுள்ளமையினால் நாங்கள் ஆட்சியமைப்பதற்கு ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணி தங்களது பூரண ஆதரவினை வழங்குவதாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

ஆட்சியமைப்பதற்கான இணக்கப்பாடே தற்போது ஏற்பட்டுள்ளது. சபைகளின் தவிசாளர் பிரதி தவிசாளர்களை நியமிப்பது எங்களுக்கு சிறிய பிரச்சினை. சபை அமைக்கும் சந்தர்ப்பத்தில் அதனை எங்களுக்குள் பேசித் தீர்மானித்துக் கொள்வோம்.

அத்துடன் சில கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களில் போட்டியிட்டு வென்றவர்களுடன் நாம் கலந்துரையாடியுள்ளோம்.

சபைகள் தொங்கு நிலையில் உள்ள ஆட்சியாக இல்லாமல் பூரண பலம் கொண்ட முடிவுகளை எடுக்க கூடிய மன்றங்களாக வவுனியாவில் உள்ள நான்கு மன்றங்களும் இருக்கவேண்டும். எனவே வவுனியாவில் உள்ள நான்கு சபைகளிலும் நாங்கள் ஆட்சியமைக்க கூடிய சூழல் இருக்கிறது.

அத்துடன் இந்த இணக்கப்பாடு உள்ளூராட்சிமன்றத்துடன் மாத்திரம் முடிவடையாமல் தொடரவேண்டும் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

இந்த இணக்கப்பபாட்டை வடகிழக்கு முழுவதும் தொடர்வதற்கு இரண்டு கட்சிகளின் தலைமைகளும் பேசி ஒரு முடிவிற்கு வருவார்கள் என எதிர்பார்கிறோம் என்றார்.(ம-4,7,250)

# முள்ளிவாய்க்கால்...


இலங்கையின் யுத்தக் குற்றவாளிகளிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை விதித்தமையை வரவேற்றுள்ள பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆனால் நீதிக்காக இன்னமும் குறிப்பிடத்தக்க அளவு நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களின் அளவு குறைவடையவில்லை எனத் தெரிவித்துள்ள ஹரோ மேற்கிற்கான பாராளுமன்ற உறுப்பினர் ஹரெத் தோமஸ் இந்த வருட ஆரம்பத்தில் பிரிட்டிஸ் அரசாங்கம் யுத்தக் குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைகளை விதித்தது. ஆனால் நீதிக்காக இன்னமும் நிறையச்செய்ய வேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்காலின் யுத்தசூன்ய வலயத்தின் மீதான இலங்கை அரசாங்கத்தின் தாக்குதல்களிற்கு எதிர்ப்புத் தெரிவித்து 2009 ம் ஆண்டு லண்டனில் தமிழ் சமூகம் எவ்வாறு அணிதிரண்டது என்பது எனக்கு நினைவிருக்கின்றது எனத் தெரிவித்துள்ள மிட்சாம் மற்றும் மோர்டனிற்கான பாராளுமன்ற உறுப்பினர் சிபான் மக்டோனா இலங்கை அதிகாரிகளிற்கு எதிரான பிரிட்டனின் தடை சிறிய நடவடிக்கை போல தோன்றலாம். ஆனால் அது எதிர்காலத்திற்கான பெரும் நம்பிக்கையை வழங்குகின்றது எனக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் நீதி மற்றும் சமாதானத்திற்கான எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதற்காக பிரிட்டிஸ் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவேன் என எப்பிங் பொரெஸ்டிற்கான பாராளுமன்ற உறுப்பினர் நெய்ல் ஹட்சன் தெரிவித்தார்.பிரிட்டனின் தடைகளை வரவேற்பதாக தெரிவித்த ஈஸ்தாமிற்கான பாராளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் டைம்ஸ் பொறுப்புக்கூறலிற்காக இன்னமும் செய்ய வேண்டிய விடயங்கள் உள்ளன எனக் குறிப்பிட்டார். (ம-4,7)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் பிரதி அதிபர்
திருமதி கார்த்திகா செந்தில்க்குமரன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**குருநாதர் பாலகிருஷ்ணன்**


அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டுத் துயரடைவதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 1947.03.30 மறைவு 2025.05.14

ஆசிரியர் ஊழியர் நலன்புரிக் கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை

(C-2975)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15 . 02 . 1932

மறைவு 15 . 05 . 2025

**அமரர் கார்த்திகேசு மகேஸ்வரி**

காற்றோடு கலந்த சுவாசம்....
கண்ணீராய் வடிந்த பாசம்...
உலகினைக் கடந்து
போனாலும்...
உறவுகளைக் கடந்து
போனாலும்..

ஓர் நல்ல மனிதனை ...
உங்களோடு...
பயணித்தவர்கள் மறந்து
போவார்களா...
உன்னதமான உயிருக்கு
இறுதி அஞ்சலி

பெறாமக்கள், சத்தியரூபன் குடும்பம், சத்தியபாமா குடும்பம்
பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும்

(1135)

# Notice

**Due to Consecutive Public holidays the Closing date For interim admission applications has been extended the new deadline is may 21, 2025**

- Principal -

J/Hartley College, Point pedro


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதிகளைக் கண்காணிக்க AI தொழில்நுட்பம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் பேருந்து சாரதிகளைக் கண்காணிக்கவும், பொதுப் போக்குவரத்தில் ஆசனப் பட்டிகளைக் கட்டாயமாக்கவும், செயற்கை நுண்ணறிவை(AI) பயன்படுத்தவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**



இலங்கையில் ஆண்டு தோறும் சராசரியாக 3,000 பேர் என்ற அளவில் வீதி விபத்துக்களால் இறப்புகள் பதிவாகின்றன.

இதனையடுத்து, அடுத்த ஆண்டு முதல் பேருந்துகளில் சாரதி கண்காணிப்பு அமைப்புகள் பொருத்தப்பட உள்ளன. அதே நேரத்தில் ஜூன் முதல் பொதுப் போக்குவரத்தில் ஆசனப்பட்டிகள் கட்டாயமாக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க கொழும்பில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

சிறந்த சாரதிக் கலாசாரத்தை வளர்ப்பதற்கும் பாதுகாப்புத் தரங்களை மேம்படுத்துவதற்குமாக, இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொத்மலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட விபத்துக்கான காரணம் இன்னும் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-8)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து மலையில் மோதியகார்

(நுவரெலியா)

நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை நோக்கி அதிவேகமாக பயணித்த கார் ஒன்று பிரதான வீதியில் உள்ள மலைப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

இந்த விபத்துச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த காரை சட்டத்தரணி ஒருவர் ஓட்டிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்து கார் மலைப் பாதையில் மோதியதில் விபத்துக்குள்ளானதாக தெரிய வந்துள்ளது. இவ் விபத்தில் சட்டத்தரணிக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான

# நடைமுறைப் பரீட்சைகள் இம் மாதம் 21 இல் ஆரம்பம்

(கொழும்பு)

2024 (2025) க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளுக்கான நடைமுறைப் பரீட்சைகள் இம் மாதம் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் கூற்றுப்படி, நடைமுறைப் பரீட்சைகள் மே 21 முதல் 31 வரை நாடு முழுவதும் 1,228 தேர்வு மையங்களில் 171,100 பரீட்சார்த்திகளுக்காக நடைபெறும்.


எழுத்துத் தேர்வு மற்றும் நடைமுறைத் தேர்வுகள் இரண்டிலும் மாணவர்கள் தோற்றுவது கட்டாயம் என்று பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

ஏனெனில் இரண்டு தேர்வுகளின் மதிப்பெண்களும் பாடங்களின் இறுதி முடிவுகளைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை மே 19 முதல் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான www.doenets.lk இல் இருந்து தேர்வுச் சுட்டெண் எண்ணை உள்ளிட்டு பதிவிறக்கம் செய்யலாம். (நி-8)

# மகிந்தவை நலம் விசாரிக்க சென்ற ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்திக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது வீட்டிற்குச் சென்றுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்திற்கு ரணில் விஜயம் செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் உடல் நலனைப் பற்றி விசாரிப்பதற்காக ரணில் அவரது வீட்டிற்குச் சென்றுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அண்மையில் காலில் அறுவை சிகிச்சை செய்த நிலையில் வீட்டில் ஓய்வு எடுத்து வருகிறார்.

இந்நிலையில் அவரது நலன் விசாரிப்பதற்காக கடந்த நாட்களாகப் பல அரசியல்வாதிகள் மகிந்த வீட்டிற்குச் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# நெல் விதைப்பின்போது விபரீதம்! மின்னல் தாக்கி ஒருவர் பலி

(கொழும்பு)

மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவின் விஜயபுர பகுதியில் இடம்பெற்றது.

இவ் அனர்த்தம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மின்னல் தாக்கி உயிரிழந்தவர் விஜயபுர, தமனேவெல பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர்.

வயலில் நெல் விதைக்கும் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தெஹியத்தகண்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

# மீனவர் ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை

## கடற்றொழில் அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்திற்குள் மீனவர் ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாகக் கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

மீன்பிடிச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

இதனை முன்னிட்டு உபகுழு அண்மையில் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# புதிய கடன் அட்டைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இலங்கையில் செயற்படும் புதிய கடன் அட்டைகளின் எண்ணிக்கை 11,881 ஆக அதிகரித்துள்ளது.


கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், 0.6 வீதம் அதிகரிப்பு என மத்திய வங்கியின் சமீபத்திய தரவு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் செயற்பாட்டில் உள்ள கடன் அட்டைகளின் எண்ணிக்கை 1.5 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், மத்திய வங்கியின் சமீபத்திய தரவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் ஆண்டு

# நினைவஞ்சலி



பிறப்பு
02 . 10 . 1942

இறப்பு
25 . 05 . 2024

## அமரர் திரு. சின்னத்தம்பி
## குகநமசிவாய முதலியார் (குகன்)

[குகரதி புடவையகம் – நெல்லியடி]

அப்பா நீங்கள் எம்மை விட்டு பிரிந்து சென்று
இன்றோடு ஓர் ஆண்டுகள் ஆனதப்பா – ஆனாலும்
எம் மனமோ இன்னும் ஆறவில்லை
ஆனால் நேற்றுப்போல் இருக்குதப்பா
நினைவுகள் தோற்றுப்போய் நாம் அழுத
பொழுதுகள் காலங்கள் பல கடந்தாலும்
என்றும் எம் மனங்களில் காவியமாய் இருப்பீர்கள்
அப்பா நீங்கள் சென்ற தேசமதில் நிலையான
அமைதி கொள்ள வேண்டுகின்றோம் அப்பா!

ராணி மில் வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

பிரிவால் வாடும் -
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

(1133)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் அராஜகங்கள் மிகக் கொடூரமானவை!

## நினைவுத்தூபிக்கான எதிர்ப்பு அதற்கான சான்று என்கிறார் பிரம்டன் மேயர்


(ஒட்டாவா)

**கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை ராஜபக்ஷ குடும்பம் எதிர்ப்பது அந்த நினைவுத்தூபிக்குக் கிடைத்த கௌரவமாகும் என கனடாவின் பிரம்டன் மேயர் பட்ரிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.**

சமூக ஊடகப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ராஜபக்ஷ குடும்பம் இனப்படுகொலை இடம்பெறவில்லை என உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தால் நீதியை குழப்புவதற்கான நடவடிக்கைகள், வழக்கு விசாரணையிலிருந்து மறைந்திருத்தல் போன்றவற்றை கைவிட்டு விட்டு சர்வதேச விசாரணைகளிற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இந்தக் குடும்பம் பொறுப்புக் கூறலை எதிர்கொள்வதற்கு



பதில், இலங்கை அரசால் பாதுகாக்கப்பட்டுள்ளது. இது வெட்கக்கேடான விடயம்.

ராஜபக்ஷ குடும்பம் இழைத்துள்ள மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் போல் பொட், ஸ்லோபடான் மிலோ சோவிக், ஹென்றிச் ஹிம்லர் மற்றும் புளிசியான் கபுகா ஆகிய சர்வாதிகாரிகள் இழைத்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுடன் போட்டியிடும் அளவிற்கும் மோசமானவை.

கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை ராஜபக்ஷ குடும்பம் எதிர்ப்பது அந்த நினைவுத்தூபிக்கு கிடைத்த கௌரவமாகும் என அவர் தெரிவித்தார். (நி-8)

## ஐ.ம.ச ஆதரவாளர் வீட்டின் மீது தாக்குதல்

### பொலிஸில் முறைப்பாடு

(தருமபுரம்)

கிளிநொச்சி அம்பாள் குளம் கிராமத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் ஆதரவாளரின் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது குறித்த வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெற்றிருந்தார்.

இந்த நிலையில் குறித்த வேட்பாளருக்கு ஆதரவாக தீவிர பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீதே கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது

இது தொடர்பாக குறித்த வீட்டின் உரிமையாளர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினைப் பதிவு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8-316)

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கிளிநொச்சியில் முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பரந்தன் நகர்ப்பகுதியில் நேற்று முன்தினம் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அப்பகுதியில் உள்ள கடைகள், பொது இடங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டது.

நுளம்பு பெருகக் கூடிய வகையில் காணப்பட்ட இடங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. (8)

## யாழில் தாதிய மாணவர்களின் நடைபயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தாதிய கல்லூரியின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ். தாதிய கல்லூரியும் யாழ். போதனா வைத்தியசாலையும் இணைந்து நடத்திய தாதியர்களின் நலனை மேம்படுத்தும் நடைபயணம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.



இவ் நடைபயணத்தில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி, தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர், நிர்வாகத்துறை யினர், தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (நி-8-33)

# இராசிபலன்

16.05.2025
வைகாசி 02, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 03.27 மணிவரை

மூலம் பிற்பகல் 2.47 மணிவரை
சுபநேரம் 05.53-07.23 மணிவரை
இராகுகாலம் 10.23-11.53மணிவரை
அமிர்தசித்தம், சங்கடகர சதுர்த்தி

சந்திராஷ்டமம்- ரோகினி, மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** — தடைகள் அகன்று தன வரவு கிடைக்கும் நாள், பூர்விகச் சொத்து சம்பந்தப்பட் வகையில் நன்மையுண்டு, மறைமுகப் போட்டிகளையும் சமாளிப்பீர்கள்.

**கடகம்** — உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், வழிபாடு திருப்தி தரும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்** — உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** — வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் கூடும், உடல் நலனில் அக்கறை தேவை, இடமாற்றத்தில் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**ரிஷபம்** — மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** — சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், சிந்தனை ஆற்றலினால் சிறப்படைவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** — குடும்ப மகிழ்ச்சி கூடும், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கும்பம்** — இயல்பான வழிகளில் இன்பங்கள் கூடும், திடீர் பணவரவால் சந்தோசமடைவீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்

**மிதுனம்** — சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளிநாட்டு தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி** — பொருளாதார நிலை உயர வழிகள் செய்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** — வழிபாட்டில் ஆர்வம் கூடும், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உற்சாகமான நாள்.

நல்ல எண்ணங்களைத் தூவினால்தான் நல்ல பலனைப் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை அருள்மிகு அருளானந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் உற்சவங்கள் இடம்பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை சப்பறத்திருவிழாவும், 9 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி செவ்வாய் கிழமை தீர்த்தத்திரு விழாவும் அன்று மாலை கொடியிறக்கமும் இடம் பெற்று 11 ஆம் திகதி புதன் கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறவுள்ளதென ஆலய ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ இ. சோமேஸ்வரசர்மா தெரிவித்துள்ளார். (3-8-33)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி நாவலடி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் 37 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாணவ மன்ற மண்டபத்தில் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.குணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு விருந்தினர்களாக சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்க சமாச செயலாளர் திருமதி.பி.தயாளினி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.பி.சுகிர்தா, இமையாணன் மேற்கு கிராம அலுவலர் என்.சேகர், சிக்கன கடன்கூட்டுறவு சங்க சமாச இயக்குனர் சபை உறுப்பினர் என்.பார்த்தீபன், கரவெட்டிப் பிரந்திய வெளிக்கள உத்தியோகத்தர் கே.தவச்செல்வம் மற்றும் நாவலர் சனசமூக நிலையத் தலைவர் ஆர். ரவிபாலச் சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (3-8)

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

கண்ணாடிப் போத்தல்கள், பிளாஸ்ரிக் பரல், பானைகள் போன்ற பொருட்கள் 17.05.2025 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

குறித்த பகிரங்க ஏலத்தில் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

மேலும் ஏலத்தில் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்க வேண்டுமெனவும், அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக்கொள்ளும் பொருட்கள் உடனடியாக வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டுமெனவும் அறிவித்துள்ளனார். (நி)

## 'பேறுகால உளநலம் பேசாததை பேசுவோம்' நூல் வெளியீட்டு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் 11.05. 2025 அன்று இடம்பெற்ற உளநல மருத்துவர் எஸ். சிவதாஸ் எழுதிய "பேறுகால உளநலம் பேசாததை பேசுவோம்" நூலினை நிகழ்வின் பிரதம விருந்தினர் திருமதி ஞானரூபன் கவினி வெளியிட்டு வைக்க அதனை சுரேஸ் குமார்மதி பெற்றுக்கொண்டார்.

மேற்படி நூலினை பெற்றுக் கொண்டவர் போர் இடம் பெற்ற காலப்பகுதியில் முள்ளிவாய்க்கால் பதுங்கு குழியில் தனது மகனைப் பெற்றெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-33)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட ரோட்டரி அரையாண்டிற்கான மின்இதழ் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் சுன்னாகத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றிருந்தது. மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக ரோட்டரி உதவி மாவட்ட ஆளுநர் ரோட்டேரியன் சுகந்தன் கலந்து கொண்டு மின்னிதழை வெளியிட்டு வைத்திருந்தார். (படம்:- சுபேசன்)

## காலவதியான பொருட்கள் விற்பனை உரிமையாளருக்கு 46,000 ரூபா தண்டம்

(வவுனியா)

மனித நுகர்வுக்கு ஒவ்வாத பல சரக்குப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த கடை உரிமையாளருக்கு எதிராக 46,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் உணவு கையாளும் நிலையங்கள், பூட்சிற்றிகள், பலசரக்கு வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் கடந்த 23.04. 2025 ஆம் திகதி மாங்குளம் பகுதியில் உள்ள கடைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது கடை ஒன்றில் வண்டுமொய்த்த பொருட்கள் மற்றும் திகதி காலாவதியான பொருட்கள் விற்பனைக்காக வைத்திருந்தமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து மேற்படி பொருட்களை கைப்பற்றிய பொது சுகாதார பரிசோதகர்கள் முல்லைத்தீவு மேலதிக நீதவான் நீதிமன்றில் கடை உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

தொடர்ந்து வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்ட மேலதிக நீதவான் கடை உரிமையாளர் குற்றவாளியாக இனங்கண்டு தலா 46,000 ரூபா தண்டம் விதித்ததுடன் கடுமையான எச்சரிக்கையும் வழங்கினார்.

குறித்த சோதனை நடவடிக்கை பொது சுகாதார பரிசோதகர் அவர்களின் தலைமையில் முத்தையன் கட்டு பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் ஒட்டுசுட்டான் பொதுச் சுகாதார பரிசோதகர் உள்ளிட்ட குழுவினரால் மேற்கொள்ளப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-299)



தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட "மாணிக்கம் பூமணி ஞாபகார்த்த நூலகம்" கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை அதிபர் ந.வில்லியம் சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பிரதம விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் சிறப்பு விருந்தினராகவும், தீவக வலய கல்விப் பணிப்பாளர் தி.ஞானசுந்தரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 550 | 400 | 500 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 230 | 230 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 150 | 180 | 200 | 150 | 250 |
| தக்காளி | 800 | 1000 | 1200 | 750 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 350 | 200 |
| கோவா | 500 | 550 | 600 | 350 | 600 |
| கரட் | 900 | 950 | 1200 | 900 | 1000 |
| பூசணி | 180 | 200 | 180 | 180 | 200 |
| புடோல் | 250 | 300 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-300 | 300 | 150-320 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 180 | 150 | 150 |
| பாகற்காய் | 1500 | 700 | 1000 | -- | 800 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 200 | 400 |
| பயற்றங்காய் | 400 | 300 | 600 | 200 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 210 | 400 |
| பீற்றூட் | 600 | 500 | 600 | 500 | 800 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 2000 | 2000 | 2000 | 2000 | 1600 |
| போஞ்சி | 800 | 750 | 1000 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 350 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 180 | 150 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 450 | 400 | 350-420 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 300 | 250 | 120-220 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 1000 | 450 | 600 |
| வெங்காயப்பூ | -- | 600 | 600 | 700 | 600 |
| முள்ளங்கி | 150 | 160 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| [illegible] | 150 | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் மரக்கறி வகைகளின் விலை வெகுவாக உயர்வடைந் துள்ளது.

சில மரக்கறி வகைகள் கிலோ ஒன்று ஆயிரம் ரூபாவிற்கும் அதிக மாக விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலை காரண மாக இவ்வாறு மரக்கறி விலைகள் உயர்வடைந்ததாக மரக்கறி விற்பனை யாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி)

# கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இலங்கை- இந்தியா

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய வெளி நாட்டுக் கடன் மறுசீரமைப்பு செயல் முறை தொடர்பாக இலங்கையும் இந்தியாவும் அண்மையில் 930.8 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கிக்கும் இடையே இருதரப்பு திருத்த ஒப்பந்தங்கள் முறையே மார்ச் 25 மற்றும் ஏப்ரல் 3 ஆகிய திகதிகளில் கையெழுத்திடப்பட்டன. (நி-8)

# மிக விரைவில்

## தாதியர் பல்கலைக் கழகம்

### அமைச்சர் உறுதி

**(கொழும்பு)**

**இலங்கையில் மிக விரைவில் தாதிய ருக்கான பல்கலைக்கழகம் ஒன்று அமைக் கப்படும் என சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதியளித்துள்ளார்.**

சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று நாரஹேன்பிட்டை அபயராம விகாரையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். தற்போதைக்கு தாதியர் பல்கலைக் கழகம் அமைப்பதற்கான சாத்தியம், அதன் சாதக, பாதகங்கள் குறித்து கலந்து ரையாடல்கள் மேற்கொள்ளப்படு கின்றது.

மிக விரைவில் பல்கலைக்கழகம் ஒன்றைத் ஸ்தாபிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.



இந் நாட்டின் சுகாதார நிலையை மேம்படுத்த எதிர்வரும் நாட்களில் பல்வேறு பிரதேசங்களை மையப்ப டுத்தி 100 ஆரம்ப சுகாதார நிலை யங்களை நிறுவவும் உத்தேசித்துள் ளோம் என்றும் அமைச்சர் தெரி வித்துள்ளார். (நி-8)

## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
## வாகன சுத்திகரிப்பு சேவை 2025-2026

தலைவர், பிராந்திய பெறுகைகள் குழுப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்குட்பட்ட வாகனங்களுக்கான சுத்திகரிப்புச் சேவையினை வழங்கு வதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களைக் கோருகின்றார்.

**1.யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வாக னங்களிற்கான சுத்திகரிப்பு சேவை**

| தொ.இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | கேள்வி உத்தரவாத முறி | கேள்வி திறக்கும் நேரம் |
|---|---|---|---|---|
| 01 | NP/RDHS/VS/2025 | வாகன சுத்திகரிப்பு | 180,000.00 | 30.05.2025 மு.ப 10.30 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி மேற் கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் /சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2- பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 021 222 6253, 021 221 2278 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ் முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 16.05.2025 ஆம் திகதி முதல் 29.05.2025 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 30.05.2025 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம்** என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 23.05.2025 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் வேண்டும் என்பதுடன் இப் பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவ ணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப் பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுக் கோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு.**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-9971 மின்னஞ்சல்:** rdhsjaffna15@gmail.com


## மணிவிழா நாயகியை
## சேவைநயந்து வாழ்த்துகின்றோம்

(கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி)




திருமதி. சிவகலை சுதாகரன் (SLTS-I)

*பயிற்றப்பட்ட மனைப்பொருளியல் ஆசிரியர்*

சேவை விபரம்

- வவு/ தவசிகுளம் அ.த.க. பாடசாலை (1989.11.22–1991.05.20)
- யா/ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை–கோப்பாய் (1991.05.21–1992.12.31)
- வவு/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம் (01.01.1993–31.01.1995)
- கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் (01.02.1995–01.01.2009)
- கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை (02.01.2009–28.05.2019)
- கிளி/பன்னங்கண்டி இ.த.க பாடசாலை (29.05.2019–28.02.2023)
- கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி (01.03.2023–17.05.2025)

(சி–2970)

எமது கல்லூரியில் நிறைவான சேவையாற்றி
ஓய்வு பெறும் ஆசானை
வாழ்த்தி அவரது ஓய்வுக்காலம் சிறக்க
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்


*வாழ்த்துவோர்-* கல்லூரிச் சமூகம்
கிளிநொச்சி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரொம்ப நெருக்கடி... கொஞ்சம் கருணை காட்டுங்க...

# சிந்துநதி நீரை திறக்குமாறு இந்தியாவுக்கு பாகிஸ்தான் கடிதம்



(டில்லி)

சிந்துநதி நீர் ஒப்பந்தத்தை முடக்குவதற்கான இந்தியாவின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு பாகிஸ்தானின் நீர் வள அமைச்சகம் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது.

ஏப்ரல் 22 அன்று பஹல்காம் பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து, 1960 ஆம் ஆண்டு உலக வங்கியின் மத்தியஸ்தத்தில் மேற்கொள்ளப்பட்ட நதி நீர் பங்கீடு ஒப்பந்தத்திலிருந்து இந்தியா விலகியது.

பயங்கரவாதத்திற்கு எதிரான பாகிஸ்தான் வலுவான நிலைப்பாட்டை எடுக்கும் வரை ஒப்பந்தத்தை முடக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி, கிழக்குப் பகுதி நதிகளான சட்லஜ், பியாஸ் மற்றும் ரவி ஆகியவற்றின் நீரை இந்தியாவும், மேற்குப் பகுதி நதிகளான சிந்து, ஜீலம் மற்றும் செனாப் ஆகியவற்றின் நீரை பாகிஸ்தானும் பயன்படுத்தலாம்.

ஆனால் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, பாகிஸ்தானுக்கு தண்ணீர் செல்வது படிப்படியாக முற்றிலுமாக நிறுத்தப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல் தெரிவித்தார். மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பிறகும், நதி நீர் ஒப்பந்தம் குறித்த தனது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என இந்தியா தெரிவித்தது.

இந்நிலையில் வெளியுறவு அமைச்சகத்திற்கு அனுப்பிய கடிதத்தில், இந்தியாவின் இந்த முடிவு பாகிஸ்தானில் நெருக்கடியை உருவாக்கும் என்று பாகிஸ்தான் நீர்வள அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி-8)

# எங்களின் உண்மையான நண்பன் பாகிஸ்தான்

## துருக்கி ஜனாதிபதி திட்டவட்டம்



(அங்காரா)

இந்தியாவின் "ஆப்ரேஷன் சிந்தூர்" நடவடிக்கையின் போது பாகிஸ்தானுக்கு ஆதரவளித்த துருக்கி நாட்டுக்கு எதிர்ப்பு அதிகரித்து வருகிறது.

இந் நிலையில் பாகிஸ்தான் எங்களின் உண்மையான நண்பன் என்றும், எதிர்காலத்தில் அந்த நாட்டிற்கு நாங்கள் தொடர்ந்து துணை நிற்போம் என்றும் துருக்கி ஜனாதிபதி எர்டோகன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தத்திற்கு குரல் கொடுத்த துருக்கிக்கு பாகிஸ்தான் நன்றி தெரிவித்த பிறகு, பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப்பைப் பாராட்டி எர்டோகன் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

எர்டோகன் தனது அறிக்கையில், "எனது அன்பு நண்பர் ஷேபாஸ் ஷெரீப் அவர்களே, துருக்கிக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சகோதரத்துவம் உண்மையான நட்புக்கு ஒரு சான்றாகும். உலகில் ஒரு சில நாடுகள் மட்டுமே இத்தகைய உறவைப் பேணுகின்றன.

துருக்கியில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை நாங்கள் விரும்புவது போல, பாகிஸ்தானிலும் அதை விரும்புகிறோம்" என்று தெரிவித்தார்.

சர்ச்சைகளைத் தீர்ப்பதில் பேச்சுவார்த்தை மற்றும் சமரசத்திற்கு முன்னுரிமை அளிக்கும் பாகிஸ்தான் அரசாங்கத்தின் கொள்கையைப் பாராட்டுவதாக அவர் தெரிவித்தார்.

மேலும் "கடந்த காலங்களில் நல்ல மற்றும் கெட்ட காலங்களில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக நாங்கள் நின்றது போல, எதிர்காலத்திலும் பாகிஸ்தானுக்கு ஆதரவாக நிற்போம். பாகிஸ்தான் - துருக்கி நட்புறவு நீடூழி வாழ்க! என்று எர்டோகன் தெரிவித்தார். (நி-8)

# டிக்டொக் நேரலையில் மாடல் அழகி சுட்டுக்கொலை

## மெக்சிக்கோவில் அதிர்ச்சி

(மெக்சிக்கோ)

மெக்சிகோவில் டிக்டொக் நேரலையின் போது மாடல் அழகி ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜலிஸ்கோ மாநிலத்தில் உள்ள ஜபோபான் எனும் பகுதியில் பியூட்டி சலூனில் பணியாற்றி வந்தவர் வலேரியா மார்க்வெஸ். 23 வயதான இவர், டிக்டொக் மற்றும் இன்ஸ்டாகிராமில் 2 லட்சம் பாலோவர்ஸ்களுடன், சமூக வலைத்தளத்தில் மிகவும் பிரபலமான வராக திகழ்ந்து வந்துள்ளார். தான் செய்யும் மேக்கப் பணி குறித்த வீடியோக்களை சமூகவலைத் தளங்களில் பதிவிட்டு வந்துள்ளார். அவ்வப்போது நேரலையில் தன்னைப் பின்தொடர்பவர்களுடன் பேசுவதை வழக்கமாக கொண்டிருந்துள்ளார்.

இந்த நிலையில், வலேரியா மார்க்வெஸ் தான் பணியாற்றும் சலூனில் இருந்து, டிக்டொக் நேரலை செய்து கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த மர்ம நபர், வலேரியாவை சரமாரியாக சுட்டுக்கொன்றுள்ளார். இது டிக்டொக் நேரலையில் அப்படியே ஒளிபரப்பானது. இதனைக் கண்டதும் நேரலையில் இருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து, அவரது செல்போனை எடுத்த நபர், தனது முகத்தை நேரலையில் காட்டியுள்ளார். இது குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார், அந்த நபர் குறித்து விசாரித்து வருகின்றனர். (நி-8)


# பரம
# அ

(வோஷிங்
இஸ்லாமி
அரசாங்கத்
தடைகளையும்
திடீரென அ
அந்நாட்டு ஜ
சிரியா - இ
உறவுகளை ஏ
வலியுறுத்தியு

சவூதி அரேபியாவில் நேற்று முன்தினம் சிரியா ஜனாதிபதியை சந்தித்து, அந்நாட்டின் நீண்டகால எதிரியாக கருதப்படும் இஸ்ரேலுடனான உறவுகளை இயல்பாக்குமாறு

கோரி
ஒ
இடம்
பிறகு
முயற்
விதித்
அறிவி

# ஒன்றுடன் ஒ
## விபத்திற்குள்ளான
## 21 பேர் உ



(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளதாகச் சர்வதேச செய்திகள் தெரிவிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# எதிரிகளை ஒன்றிணையுமாறு
# மரிக்கா வலியுறுத்து

டன்)

ரியவாத தலைமையிலான
த்தின் மீதான அனைத்துத்
யும் நீக்குவதாக அமெரிக்கா
அறிவித்ததைத் தொடர்ந்து,
னாதிபதி டொனால்ட் ட்ரம்ப்,
இஸ்ரேலுடன் சுமூகமான
ஏற்படுத்த வேண்டும் எனவும்
புள்ளார்.



கோரியுள்ளார்.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இடம்பெற்ற உள்நாட்டுப் போருக்குப் றகு மீண்டும் சிரியாவை கட்டியெழுப்ப முயற்சிக்கும் திட்டத்திற்காக அமெரிக்கா விதித்த தடைகளை நீக்குவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

எனினும் மத்திய கிழக்குக்கு வருகையில் இஸ்ரேலை உள்ளடக்காத ட்ரம்பின் பயணம், அமெரிக்காவின் முன்னுரிமைகளில் இஸ்ரேல் எந்த இடத்தில் உள்ளது என்பது குறித்த சந்தேகங்களைத் தூண்டியுள்ளது.

சிரியாவை இஸ்ரேல் மிகப்பெரிய எதிரிகளில் ஒரு நாடாகக் கருதுகிறது.

மேலும் இஸ்ரேலிய அதிகாரிகள் சிரியாவின் தலைவரான ஷாராவை ஒரு ஜிஹாதிஸ்ட் என்று தொடர்ந்து வர்ணித்து வருகின்றனர்,

இந்நிலையில் சிரியா மீதான தடைகளை நீக்குவதை இஸ்ரேல் எதிர்க்கிறது. மேலும் முன்னாள் ஜனாதிபதி பஷார் அல்-அசாத்தை கவிழ்த்து ஷரா ஆட்சிக்கு வந்ததிலிருந்து இஸ்ரேல் சிரியாமீது இராணுவத் தாக்குதல்களை அதிகரித்துள்ளது. (நி-8)

## ஒன்று மோதி
## ான 3 வாகனங்கள்
## உயிரிழப்பு



கின்றன.

மெக்சிக்கோ Puebla மாநிலத்திலுள்ள அதிவேக வீதியில் 3 வாகனங்கள் ஒன்றோடொன்று மோதி விபத்திற்குள்ளாகியுள்ளன.

18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாகவும் அந்நாட்டு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த மேலும் சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சீமெந்து ஏற்றிச்சென்ற ட்ரக் ரக வாகனம் வான் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது இந்த விபத்து நேர்ந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

## இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்கும் அமெரிக்கா எதிர்த்து செனட் சபையில் போராட்டம்



(வோஷிங்டன்)

இஸ்ரேலை தங்கள் நாடு ஆதரிப்பதை எதிர்த்து, அமெரிக்க செனட் சபையில் போராட்டம் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்காவின் செனட் சபையில் சுகாதார செயலாளர் ராபர்ட் கென்னடி, மத்திய சுகாதார நிறுவனங்களின் மறுசீரமைப்பு குறித்து விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது, அவரது இருக்கைக்குப் பின்புறம் அமர்ந்திருந்த பென் அண்ட் ஜெர்ரி என்ற ஐஸ்கிரீம் நிறுவனத்தின் நிறுவுனரும், சமூக ஆர்வலருமான பென்னா கோஹென் உட்பட 6 பேர், அமெரிக்காவுக்கு எதிராக திடீரென கோஷத்தை எழுப்பினர்.

காசாவில் குழந்தைகளை கொன்று குவித்து வரும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து, குண்டுக் கட்டாக அவர்களை தூக்கிச் சென்று பொலிஸார் கைது செய்தனர். இதனால், செனட் சபையில் பரபரப்பு நிலவியது.

பென்னா கோஹென் உள்ளிட்டோர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டால், அவர்கள் 90 நாட்கள் சிறை தண்டனை, 500 அமெரிக்க டொலர்கள் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும். அல்லது இரு தண்டனைகளை சேர்த்து அனுபவிக்க வேண்டியிருக்கும்.

பென்னா கோஹென் பொலிஸாரால் கைது செய்யப்படுவது இது முதல்முறையல்ல. கடந்த 2023ஆம் ஆண்டு விக்கி லீக்ஸ் இணை நிறுவனர் ஜுலியன் அசாஞ்ச் சிறையில் அடைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தியதற்காகவும் கைது செய்யப்பட்டிருந்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துகளில் இதுவரை 965 பேர் உயிரிழப்பு!

(கொழும்பு)

**இந்த ஆண்டு இதுவரை பதிவான வீதி விபத்துக்களில் மொத்தம் 965 பேர் உயிரிழந்துள்ளனர்.**

இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் மே 13 ஆம் திகதி வரை நாடு முழுவதும் வீதி விபத்துகளில் இந்த இறப்பு எண்ணிக்கைப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த காலகட்டத்தில், 902 போக்குவரத்து விபத்துகள் பதிவாகியுள்ளன.

இதன்போது, 1,842 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல், பொறுப்பற்ற முறையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் முறையற்ற வாகனப் பராமரிப்பு ஆகியவை பல விபத்துகளுக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து விபத்துகளைக் குறைப்பதற்காக நாடு முழுவதும் ஒரு சிறப்புத் திட்டத்தை செயற்படுத்தப் பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

மேலும், அதன் கீழ் சாரதி விழிப்புணர்வு திட்டங்களும் செயற்படுத்தப்படவுள்ளன. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: Diploma, Manager(Canada)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15496

பிறப்பு:1997-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா-17
உயரம்:5'9"
தகைமை/தொழில்-BSc, Software Engineer
எதிர்பார்ப்பு:Engineer, அரச உத்தி யோகம்
தொ.இ: B/15497

பிறப்பு: 1987-இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா-13 3/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA, MA,Business (own)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/15499

பிறப்பு: 1982- இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா- 24 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L, Chief
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/15500

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா-49
7இல் செவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: HNDE, TO
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15349

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா- 23
சூரி செவ் 12இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:. BBA, MBA Management Assistant.
எதிர்பார்ப்பு: நிரந்தர வேலை(Gov/Pvt)
தொ.இ: G/14352

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்:அத்தம்
1இல் செவ்
கி.பா- 81
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc, Msc (following)
எதிர்பார்ப்பு: உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/14902

பிறப்பு: 1988-இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா-56
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L, தையல்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/14709

பிறப்பு: 1992-இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 15
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: வர்த்தகபட்டதாரி (இத்தாலி)
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: G/14874

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா- 23
12இல் செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BFA, DO
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14718

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 374



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பிரச்சினையும் சாப்பாடும்

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். பெரிய அரண்மனையிலே தான் இருந்தார். எல்லா வசதியும் இருந்தது.

இருந்தாலும் அவரை எல்லாரும் சொல்வது எப்படி தெரியுமா? பிச்சைக்கார ராஜா என்று!

அப்படி ஒரு பெயர் அவருக்கு நிலைத்துப்போனது. மக்களும் சரி, மற்ற தேசங்களிலே உள்ளவர்களும சரி அவரை அந்தப் பெயர் சொல்லியே குறிப்பிடுவது வழக்கம்.

இது அவருக்கு மிகவும் கவலையாக போனது.

"என்ன இது. நம்மளை தேடி வருகிறவர்களுக்கெல்லாம் நான் சோறு போடுகிறேன். நம்மைப் புகழ்ந்து பாடல் இயற்றிக் கொண்டு வரும் புலவர்களுக்குகெல்லாம் அவர்கள் எப்போது வந்தாலும் ஒரு வேளை சோறு போட உத்தரவு போட்டிருக்கிறேன். இவ்வளவு எல்லாம் செய்தும் நம்மமைப்போய் பிச்சைக்கார ராஜா என்று எல்லாரும் சொல்கிறார்களே. அதுஏன்? எதற்காக இப்படி சொல்கிறார்கள்?" ராஜாவுக்கு குழப்பம்

"இந்த விடயத்தைப் போய் அவர்களிடம் எப்படிக் கேட்பது"என்று அவருக்குத் தயக்கமாக இருந்தது!

கௌரவக் குறைச்சலாக தெரிந்தது!

சரி சாதாரண குடிமக்களிடம் இதைப் பற்றிக் கேட்கலாமா?"என்று யோசித்தார்.

கேட்கலாம். ஆனால் அவர்கள் யாரும் ராஜா முன்னால் வந்து நின்று தைரியமாகப் பேசக்கூடிய அளவுக்கு இல்லை.

ராஜாவுடைய குழப்பம் நாளுக்கு நாள் அதிகமாகிப் போனது!

கடைசியாக அவர்ஒரு முடிவுக்கு வந்தார்.

அதாவது இதைப் பற்றி ஒரு பிச்சைக்காரனிடம் கேட்டுப் பார்த்தால் என்ன?

இதுதான் அவர் முடிவு. உடனே மாறுவேடம் போட்டுக்கொண்டு நகர்வலம் போனார் ஒரு பிச்சைக்காரனைக் கண்டுபிடித்தார்.

பிச்சைக்கார ராஜா என்று சொல்கிறார்களே! என்ன காரணமாக இருக்கும்? அப்படி என்று கேட்டார் அதற்கு அவன்

"இதற்கான பதிலை இன்னும் ஒரு முப்பது நாளிலே சொல்கிறேன்" என்றார். உடனே சந்தோசத்தில் உண்மையை அவனிடம் சொன்னார்.

"நான் வேறு யாருமில்லை. நான் இந்த நாட்டு ராஜா இப்போது நீ என் கூடவே வந்துவிடு. அரண்மனையிலேயே தங்கிக் கொள் முப்பது நாள் கழித்து எனக்குப் பதில் சொல்லிவிட்டு அதற்கு அப்புறமாக நீ போகலாம் என்று சொல்லி அழைத்துக் கொண்டு வந்து விட்டார்.

அரண்மனையிலே ஒரு மூலையிலே அவன் தங்குவதற்கு இடம் கொடுத்தார். "தினம் இரண்டு வேளையும் இவனுக்கு சோறு போடுங்கள்"என்று உத்தரவும் போட்டார். ராஜா கொடுத்த இடத்திலே போய் உட்கார்ந்து கொண்டான் அந்தப் பிச்சைக்காரன்.

தினமும் அந்த அரண்மனையிலே நடப்பதையெல்லாம் கவனித்துக்கொண்டு வந்தான். வேளா வேளைக்கு சாப்பாடு வரும். சாப்பிட்டுக்கொண்டான் இப்படி முப்பது நாள் முடிந்தது.

ராஜா வந்தார். என்ன என்னுடைய கேள்விக்குப் பதில் என்னவென்று கண்டுபிடித்துவிட்டாயா?" என்றார்.

"கண்டுபிடித்துவிட்டேன்!"என்றான்

"என்னை எல்லாரும் பிச்சைக்கார ராஜா என்று சொல்கிறார்களே அது நியாயமாகப்படுகிறதா உனக்கு" என்றார்

"நியாயமாகத்தான் படுகிறது சந்தேகமே இல்லை. நீங்கள் பிச்சைக்கார ராஜாதான்! என்னதான் நீங்கள் வசதியோடும் படை பலத்தோடும் இருந்தாலும் நீங்கள் எங்கள் வர்க்கத்தை சேர்ந்த ஆசாமிதான்!" என்று அடித்து சொல்லிவிட்டான்.

எதனால் அப்படிக் கூறுகின்றாய் என்று கேட்டார்.

"அரசே ஒரு உண்மையைக் கண்டுபிடித்துச் சொல்கிறேன். நான் உங்களிடம் சொன்னேன். நீங்கள் ராஜ பரம்பரையென்றால் உடனே உங்கள் கழுத்திலே கிடக்கும் முத்துமாலையைக் கழற்றிப் பரிசாக கொடுத்திருப்பீர்கள். பொன்னையும் மணியையும் கொடுத்திருப்பீர்கள்

ஆனால் நீங்கள் அப்படிச் செய்யவில்லை. என்னை ஒரு மூலையிலே உட்கார வைத்து இரண்டு வேளை சோறு போடச்சொன்னீர்கள். உங்களைத் தேடி யார் வந்தாலும் யார் வந்து பாராட்டிப் பேசினாலும், அல்லது பிரச்சினைகளைச் சொன்னாலும் நீங்கள் செய்யும் ஒரே காரியம் சோறு போடுவதுதான். பிச்சைக்காரனுக்கு சோறுமட்டும் தான் உலகம்.

உங்கள் விடயத்திலேயும் நீங்கள் அப்படித்தான் நினைக்கிறதாகத் தெரியுது! நன்றாகக் கவனியுங்கள்! எந்த ஒரு பிரச்சினைக்கும் சோறுதான் முடிவு என்று நினைக்கிறீர்கள் நீங்கள் சந்தேகமில்லாமல் எங்களைச் சேர்ந்த ஆளுதான்!" என்றான் அந்தப் பிச்சைக்காரன். அதற்குப் பிறகு அந்த ராஜா தன்னுடைய தவறுகளைத் திருத்திக் கொண்டார்.

பசி என்று வருபவர்களுக்கு சோறுதான் போட வேண்டும். அது தப்பில்லை! பாராட்ட வருபவர்களெல்லாம் சோற்றையே போட்டு அனுப்பினால் இப்படித்தான் பெயர் வரும்! எனக்குத் தெரிந்த ஒருவர் தினமும் யாராவது ஒருத்தரைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவார். சாப்பாடு போட்டு அனுப்புவார். முன்னறிவுப்பு இல்லாமல் திடீர் என்று ஒரு விருந்தாளியோடு வீட்டுலே போய் இவர் நிற்பது வழக்கம். அந்த அம்மாவும் இவருக்காகத் தயார் செய்து வைத்திருப்பதை இவர் அழைத்துக்கொண்டு வந்திருக்கும் விருந்தாளிக்குப் போட்டு விடுவார். விருந்தாளி சாப்பிட்டுப் போன பின் இவர் மனைவியிடம் "உனக்கு சிரமம் வேண்டாம்" என்று சொல்லி பக்கத்திலே உள்ள ஒரு ஹோட்டலுக்குப் போய் காசு கொடுத்து சாப்பிட்டு விட்டு வந்து விடுவார். பலநாள் இப்படி நடக்கும். ஒருநாள் அவரைத் தனியாக அழைத்துக் கொண்டு போய் "ஏன் இப்படி செய்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"எங்க வீட்டு சாப்பாட்டிலேயிருந்து தப்பிக்கிறதுக்கு எனக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை சேர். அதனாலே தான் இப்படிச் செய்கிறேன்!" என்று மிகவும் பரிதாபமாக சொன்னார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு குமுதினி படுகொலையின் 40 ஆம் ஆண்டு நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

**குமுதினி படுகொலையின் 40 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை முதல் நெடுந்தீவில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.**



காலை 9 மணிக்கு மாவிலித்துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி வளாகத்தில் முதன்மை நினைவுச் சுடரினை இந்து மதகுரு கா.புவனேந்திரசர்மா ஏற்றிவைக்கத் தொடர்ந்து நெடுந்தீவு பங்குத் தந்தை ப.பத்திநாதன் அடிகளார், தென்னிந்திய திருச்சபை வணபோதகர், பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் மற்றும் 7 மாத பச்சிளம் குழந்தையைப் பறிகொடுத்து தானும் படுகாயம் அடைந்து இன்றும் படுகொலையின் சாட்சியாக இருக்கும் விசுவலிங்கம் அன்னலட்சுமி மற்றும் ஏனையோர் நினைவுச் சுடர்களை ஏற்றி வைத்தனர்.

நினைவுத் தூபிக்கான மலர் மாலையினை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், குமுதினி நினைவேந்தல் குழுத் தலைவர் வி.ருத்திரன் ஆகியோர் இணைந்து அணிவித்ததைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டோர் மலர் அஞ்சலி செலுத்தி அஞ்சலித்தனர். நிகழ்வின்போது முள்ளிவாய்க்கால் அவலங்கள் நினைவாக தீவக நினைவேந்தல் குழுவினரால் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

இதேவேளை காலை 8 மணிக்கு மாவிலித்துறை வீர பத்திரப்பிள்ளையார் ஆலயம், மாவிலித்துறை சவேரியார் ஆலயம், தென்னிந்திய திருச்சபை ஆலயம் மற்றும் தேவ சபை ஆலயம் என்பவற்றில் சம நேரத்தில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்மா சாந்திக்கான வழிபாடுகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-33)

## குடிநீர் நெருக்கடியில் கிளாலி கிராம மக்கள்



(தருமபுரம்)


கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிளாலி கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொது மக்கள் தாம் நீண்ட காலமாகக் கடும் குடிநீர் நெருக்கடியைச் சந்தித்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளாலி பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான கிணறுகளின் நீர் உவர் நீராகவும், கடும் காவி நிறத்திலும் காணப்படுவதால் பொது மக்களால் குறித்த நீரை பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது. இருப்பினும்வேறுவழியின்றிக் குடிப்பதனை தவிர இதர தேவைகளுக்கு அந்த நீரையே பயன்படுத்தி வருகின் றனர்.

கடும் காவி நிறத்தில் உள்ள அந் நீரில் ஆடைகளைக் கழுவுவதன் மூலம் அவை நிறம் மாறி அழுக்கு ஆடைகள் போன்று காணப்படுவதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

ஊரில் உள்ள ஒரு சிலரின் கிணறுகளுக்கு சென்று மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிநீரைப் பெறுவதோடு பிரதேச சபையினால் ஆங்காங்கே நீர்த்தாங்கி வைத்து வழங்கப்படுகின்ற நீரும் தேவைகளை பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. அதனால் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மூலம் வழங்கப்படுகின்ற குடிநீரை விரைவுபடுத்தி வழங்குவதோடு, ஏனைய கிராமங்களில் வழங்கப்பட்டது போன்று தங்களுக்கும் இலவசமாக நீர் இணைப்பினை வழங்குவதற்கு நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-8-316)

## தமிழினப் படுகொலை; நினைவு ஊர்தி கிளிநொச்சியில்



(கிளிநொச்சி)

தமிழினப் படுகொலையைச் சித்திரிக்கும் விதமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் காலை ஊர்திப் பவனி ஆரம்பமாகியது.

குறித்த ஊர்தியானது நேற்றைய தினம் காலை கிளிநொச்சியை வந்தடைந்தது.

இந் நிலையில் பரந்தன், கிளிநொச்சி நகர் உள்ளிட்ட பகுதிகளில் குறித்த ஊர்தியை வரவேற்று மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

குறித்த ஊர்திப் பவனி இறுதியாக முள்ளிவாய்க்காலை சென்றடையவுள்ளது. (நி-8)

## மன்னாரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி



(மன்னார்)

யாழ்.பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் வியாழக்கிழமை மதியம் மன்னார் நகரப் பேருந்து நிலையப் பகுதியில் இடம்பெற்றது. எம்மவர்களின் வலி நிறைந்த வரலாற்றை அடுத்த சந்ததியினருக்கும் இளைய தலைமுறையினருக்கும் கடத்தும் கடமை பல்கலைக்கழக மாணவர்களாகிய தமது பொறுப்பு என அவர்கள் தெரிவித்து குறித்த நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இதன் போது குறித்த பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி காய்ச்சப்பட்டு மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (நி-8)

## கேரளக் கஞ்சாவுடன் நால்வர் கைது

(வவுனியா)

வவுனியா அண்ணா நகர்ப் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கேரளக் கஞ்சாவுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது 9 கிலோ 194 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் 24, 25 மற்றும் 31 வயதுடைய வவுனியாப் பகுதியைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## கிளி. மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு தவிசாளர், உப தவிசாளர்கள் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களிலும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைக்கவுள்ள நிலையில், அந்த மூன்று சபைகளுக்குமான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு கடந்த திங்கட்கிழமை கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் நடைபெற்றது.

அதற்கமைய கரைச்சி பிரதேச சபையின் தவிசாளராக அருணாசலம் வேழமாலிகிதன், உப தவிசாளராக புஸ்பநாதன் சிவகுமார், பூநகரி பிரதேச சபையின் தவிசாளராக சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், உப தவிசாளராக திருமதி. குணலக்சுமி குலவீரசிங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராக சுப்பிரமணியம் சுரேன், உபதவிசாளராக சிவகுரு செல்வராசா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த .தெரிவுகள் தொடர்பிலான மாவட்டக்கிளையின் எழுத்துமூல தீர்மானம், கிளிநொச்சி மாவட்டக் கிளைத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரனால் கட்சியின் பதில் தலைவரிடம் நேரடியாக கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 4

காவியத் தொடர் 773





மணிமேகலை அவ் வாசற் படியில் நின்றபடியே, "அடியே சந்திரமதி!" என்று உரத்த குரலில் கூறினாள். "ஏன் அம்மா!" என்று பதில் வந்தது. "கை விளக்கை எடுத்துக் கொண்டு உடனே இங்கு வா!" என்றாள் மணிமேகலை.

சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பணிப்பெண் கையில் விளக்குடன் வந்தாள். "இங்கேதான் விளக்கு நன்றாக எரிகிறதே? எதற்கு அம்மா, விளக்கு?"

"வேட்டை மண்டபத்துக்குள்ளே போய்ப் பார்க்க வேண்டும் ஏதோ ஓசை கேட்டது."

"வெளவால் இறகை அடித்துக் கொண்டிருக்கும், அம்மா! வேறு என்ன இருக்கப் போகிறது?"

"இல்லையடி! சற்று முன் இந்தப் பளிங்குக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று என் முகத்துக்குப் பக்கத்தில் இன்னொரு முகம் தெரிந்ததடி!"

"அந்த முகம் எப்படி இருந்தது? மன்மதன் முகம் போல் இருந்ததா? அர்ச்சுனன் முகம் போல் இருந்ததா?" என்று கூறிவிட்டுப் பணிப்பெண் சிரித்தாள்.

"என்னடி, சந்திரமதி! பரிகாசமா செய்கிறாய்?"

இல்லை, அம்மா இல்லை! நீங்கள் அடிக்கடி கனவில் காண்பதாகச் சொன்னீர்களே? அவர்தான் இப்போது கண்ணாடியில் தோன்றினாரோ?

ஆமாண்டி, சந்திரமதி! ஆனால் ரொம்ப ரொம்ப நிஜம் போலிருந்தது.

"எல்லாப் பெண்களுக்கும் இப்படித்தான் ஒரு சமயம் சித்தப்பிரமை பிடிக்கும். உங்களுக்கும் இன்னும் இரண்டொரு நாள் தான் அப்படி இருக்கும். நாளைக்குக் காஞ்சியிலிருந்து வரும் இளவரசரைப் பார்த்து விட்டீர்களானால், அந்தப்பழைய முகம் அடியோடு மறந்து போய்விடும்.

"அது இருக்கட்டுமடி! இப்போது இந்த வேட்டை மண்டபத்துக்குள் போய்ப் பார்க்கலாம், வா!"

"வீண் வேலை, அம்மா! வேட்டை மண்டபத்தில் ஒரே தூசியும் தும்புமாக இருக்கும் சேலை வீணாய்ப் போய் விடும்!" "போனால் போகட்டுமடி!" "இருமலும் தும்மலும் வரும் நாளைக்கு எல்லோரும் வரும் சமயத்தில்.

"சும்மா வரட்டும், வேட்டை மண்டபத்தை இப்போது சோதித்துப் பார்த்தேயாக வேண்டும் விளக்கை அசைத்து அணைத்து விடாமல் எடுத்து வா!"

இவ்விதம் கூறிக் கொண்டே மணிமேகலை வேட்டை மண்டபத்துக்குள் பிரவேசித்தாள். தோழியும் விளக்குடன் அவளைத் தொடர்ந்து வந்தாள். இருவரும் சுற்றிப் பார்த்துக் கொண்டே வந்தார்கள்.

சந்திரமதி கையிலிருந்த தீபத்துக்கு மேலாக நோக்கி உயிர் அற்ற மிருகங்களை மட்டும் பார்த்துக் கொண்டே வந்தாள். மணிமேகலையோ சில சமயம் தரையிலும் பார்த்தாள்.

தரையில் படிந்திருந்த புழுதியில் அங்குமிங்கும் கால் சுவடுகள் இருந்ததைக் கவனித்துக் கொண்டாள்.

"அம்மா, அதோ!" என்றாள் சந்திரமதி. "என்னடி இப்படிப் பதறுகிறாய்?" "அதோ அந்த வாலில்லாக் குரங்கு அசைந்தது போலிருந்தது!"


(தொடரும்...)

---



## சிறுவர் அரங்கம்

### ஒரு நீண்ட பயணம்



அதற்கு முயல் எனக்கு என்ன குறை இந்தக் காடும் புல்வெளியும் எல்லாம் எங்களுக்கு கொடுத்து விட்டது. சந்தோஷமாக இருக்கிறோம் என்றது.

முயலிடம் இருந்து விடைபெற்று இன்னும் கொஞ்சத் தூரம் நடந்தன. ஒட்டகச்சிவிங்கி குதிரையிடம் நண்பா வானம் இருட்டுகிறது. மழை வரும் என்று நினைக்கிறேன் என்றது. குதிரை சொல்லி 2 நிமிடத்தில் மழை சடசடவென கொட்டியது. உடனே ஒட்டகச்சிவிங்கி டேய் நண்பா ஓடு ஓடு அந்தப் பெரிய ஆல மரத்துக்கு அடியில் போய் நில்லு. அது நம்மை இந்த மழையில் இருந்து கொஞ்சம் காப்பாற்றும் என்றது.

பின் இரண்டும் ஓடி ஆலமரத்தடியில் நின்றன. மழை சோ என்று பெய்து கொண்டிருந்தது. இரண்டும் ஏதேதோ பேசிக் கொண்டே ஆல மரத்தடியில் நின்று கொண்டிருந்தன. [illegible] என்று குரலில் டேய் வாறை மூடுங்கடா மடைப் பசங்களா. என் குழந்தைகள் விழித்துக் கொள்ளப் போகின்றன.

இரண்டும் எங்க இருந்து அந்தக் குரல் வருகிறது. என்று சுற்றும் முற்றும் பார்த்தன. ஒட்டகச்சிவிங்கி டேய் நண்பா அந்த பொந்தைப் பாரு அங்கு இருந்துதான் அந்தச் சத்தம் வருகிறது என்றது. உடனே அந்தப் பொந்திலிருந்து ஒரு பச்சைக் கிளி எட்டிப் பார்த்தது.

பார்க்க தம்மாத்துண்டு அளவு இருந்து கொண்டு எங்களிடமே வாய் காட்டுகிறாயா என்று கேட்டது. அதற்குக் கிளி நீ எவ்வளவு பெருதாக இருந்தாலும் எனக்கு என்ன? என் குழந்தைகள் விழித்துக் கொண்டால் நீயா வந்து சமாதானப்படுத்துவாய் என்றது. அதற்கு ஒட்டகச்சிவிங்கி அது சரி தான் நாங்கள் அமைதியாகப் பேசுகிறோம் என்று சிரித்துக் கொண்டே கூறியது.

பச்சைக்கிளியும் அவர்களிடம் கனிவாகப் பேசு ஆரம்பித்தது. என்னை மன்னித்து விடுங்கள், நான் ஏதோ கோபத்தில் உங்களிடம் கொஞ்சம் கோவமாகப் பேசி விட்டேன் என்றது. அதற்கு குதிரையும் விடு நண்பா என்று கூறியது.

பச்சைக்கிளி அவர்களிடம் நீங்கள் என்ன இந்தக் காட்டுக்குப் புதுசா என்று கேட்டது. ஆமாம் என்று இரண்டும் தலையை ஆட்டின. அதன் பிறகு குதிரை பச்சைக் கிளியிடம் இந்தக் காட்டைப் பற்றி எங்களுக்கு கொஞ்சம் சொல்லேன் என்று கேட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சி என்பது தானாக மரத்திலிருந்து விழும் அப்பிள் அல்ல, நாம் தான் அதை விழச் செய்ய வேண்டும். – சேகுவேரா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாமல் போடுகின்ற உத்தரவை அநுர அரசு அமுல்படுத்துகிறதா?

தமிழின அழிப்பில் உயிரிழந்த உறவுகளுக்காக உள்நாட்டிலும் நினைவேந்தல் அமைக்க முடியாது. வெளிநாடுகளிலும் நினைவேந்தல் அமைக்கவிட முடியாது என்றால், தமிழ் மக்கள் காலாகாலமாக சிங்களப் பேரினவாதிகளுக்கு அடிமைப்பட்டு வாழ வேண்டும் என்பதுதான் அவர்களின் நிலைப்பாடாக உள்ளதென்பது உறுதியாகிறது.

ஆம், தாயகத்தில் இன அழிப்பில் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கான நினைவுத் தூபி அண்மையில் கனடாவில் அமைக்கப்பட்டமை தெரிந்ததே.

கனடாவில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி தொடர்பில் இலங்கை அரசு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

தவிர, இலங்கைக்கான கனேடிய நாட்டுத் தூதுவரை தமது அமைச்சுக்கு அழைத்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், தமது கண்டனத்தைத் தெரிவித்ததுடன் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தமிழின அழிப்பு என்பது உறுதி செய்யப்படவில்லை.

இந்நிலையில் இன அழிப்பில் உயிரிழந்தவர்களுக்கென கனடாவில் நினைவுத் தூபி அமைக்கப்பட்டமை ஏற்புடையதன்று எனக் கூறியுள்ளார்.

இங்குதான் அமைச்சர் விஜித ஹேரத் ஓர் உண்மையை மறைப்புச் செய்துள்ளார்.

அதாவது தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை ஆட்சியாளர்களும் படைத் தரப்பும் நடத்திய போர் இன அழிப்பு நடவடிக்கை என்பதை சர்வதேசம் உறுதி செய்வதற்கு சர்வதேச விசாரணையை முன்னெடுத்திருக்க வேண்டும்.

ஆனால் சர்வதேச விசாரணை நடத்துவதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் அனுமதிக்கவில்லை.

உண்மையில் தமிழின அழிப்பு இடம்பெறவில்லை என்றால், சர்வதேச விசாரணையை நடத்துவதற்கு இலங்கை அரசுகள் எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேண்டிய அவசியமில்லை.

இங்கு சர்வதேச விசாரணைக்கு அறவே இடமில்லை என்று மறுப்புத் தெரிவிக்கும் போது, தமிழின அழிப்பு நடைபெற்றமை உறுதி செய்யப்படுகிறது.

ஆக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ போடுகின்ற உத்தரவை சிரமேற்கொண்டு செய்வதுபோல வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கனேடியத் தூதுவரை அழைத்துத் தமது கண் டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் தேசிய ரீதியிலோ அன்றி சர்வதேச ரீதியிலோ இலங்கையில் தமிழின அழிப்பு இடம்பெற்றமை உறுதி செய்யப்படவில்லை என நாமல் ராஜபக்ஷ கூறியதை அப்படியே பிரதிமை செய்து; அமைச்சர் விஜித ஹேரத் கனேடியத் தூதுவரிடம் ஒப்புமை செய்துள்ளார்.

உண்மையில் சர்வதேச விசாரணைக்கு நாமல் ராஜபக்ஷவின் தந்தை மகிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்கினாரா? என்ற கேள்வியை எழுப்பியிருக்க வேண்டிய அமைச்சர் விஜித, தன்னை ஒரு பேரினவாதியாகக் காட்டிக் கொண்டு தமிழ் மக்களுக்கு வஞ்சனை செய்துவிட்டார் என்பதுதான் இங்கு உறுதி செய்யப்படுகிறது.

# முன்னாள் இராணுவத் தளபதி கமாலுக்கு பிரிட்டன் பயணத்தடை விதிக்க வேண்டும்

## ஆதாரங்களுடன் கோரிக்கை விடுத்தது சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி கமால் குணரட்ண விற்கு எதிராகத் தடைகளை விதிக்கவேண்டும் எனக் கோரும் ஆவணத்தை ஆதாரங்களுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய அமைச்சிடம் கையளித்துள்ளது.

இது தொடர்பில் அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் யுத்தம் முடிவடைந்ததை குறிக்கும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை நாங்கள் நெருங்கிக்கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி கமால் குணரட்ணவிற்கு எதிராக தடைகளை விதிக்க வேண்டியமைக்கான ஆதாரங்கள் அடங்கிய ஆவணத்தினை மக்னிட்ஸ்கி தடைகளிற்காக பிரிட்டனின் வெளிவிவகார பொதுநலவாய சர்வதேச அபிவிருத்தி அமைச்சிடம் கையளித்துள்ளோம்.

கமால் குணரட்ணவுடன் இணைந்து பணியாற்றிய 58வது படைப்பிரிவின் தளபதி சவேந்திர சில்வாவிற்கு எதிராகப் பாரிய மனித உரிமை மீறல்களிற்காக அமெரிக்கா தடை விதித்துள்ளதையும் அவரும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்கு செல்ல முடியாது என்பதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம். பிரிட்டனும் சவேந்திர சில்வாவிற்கு எதிராகத் தடைகளை விதித்துள்ளது.

2009 இல் கமால் குணரட்ண, சவேந்திர சில்வாவின் கட்டளை தளபதியாக செயற்பட்ட ஜகத்ஜயசூரியவிற்கு எதிராக பிரிட்டன் தடைகளை அறிவித்துள்ளதையும் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

2017 இல் லத்தீன் அமெரிக்காவில் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் இவருக்கு எதிராக சர்வதேச நியாயாதிக்கத்தினை தாக்கல் செய்தது என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம்.

அவுஸ்திரேலியாவிற்கு அவர் பயணம் மேற்கொள்வதைத் தடுப்பதற்காக குற்றவியல் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதையும் தடைகளிற்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

யுத்த காலத்தில் பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றிய இவர்களின் தலைமை அதிகாரி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக கனடா ஏற்கனவே தடைகளை விதித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளோம்.

மேலும் முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள்பாதுகாப்பு அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக கனடா தடைகளை விதித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளோம் என்றுள்ளது. (ம-4,7)

## சி.ஐ.டியிடம் இழப்பீடு கோரிய பிள்ளையான்

(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் உயர் நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு எதிராக அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்து 100 மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரியுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில்,

தடுத்து வைத்து விசாரிக்கின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே அடிப்படை உரிமைகள் குறித்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (ம-4,7)

## உரிமை மீறலில் ஈடுபட்டோர் சர்வதேச நீதிமன்றில் முற்படுத்தப்பட வேண்டும்

### பிரிட்டன் எம்.பி உமாகுமரன்

(லண்டன்)

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்தவேண்டும் என தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பேன் என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் உமாகுமரன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஸ் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முள்ளிவாய்க்காலில் சிக்குண்டிருந்த மக்கள் இனப்படுகொலை செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் எப்படி 2009ம் ஆண்டு லண்டனை ஸ்தம்பிக்க செய்தனர் என்பதை இதன்போது அவர் நினைவுகூர்ந்துள்ளார்.

அத்துடன் இந்த வருடம் இலங்கையின் சிரேஷ்ட அதிகாரிகளிற்கு எதிராக தடைகளை விதித்ததன் மூலம் பிரித்தானிய அரசாங்கம் குறிப்பிடத்தக்க நடவடிக்கையை எடுத்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்தவேண்டும் என தொடர்ந்தும் அழுத்தம் கொடுப்பேன் என இதன்போது அவர் மீண்டும் உறுதிபடத் தெரிவித்தார். (ம-4,7)

## இலங்கையில் இனப்படுகொலையா? இல்லவே இல்லை என மறுத்த நாமலை சாடிய சின்மயி

(சென்னை)

இலங்கையில் தமிழினப் படுகொலை என ஒன்று இடம்பெறவே இல்லை. அனைத்தும் கட்டுக்கதை என்ற ரீதியில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இட்ட எக்ஸ் தளப் பதிவுக்கு “முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்தல்” எனும் முதுமொழியை வைத்து பிரபல தென்னிந்தியப் பாடகி சின்மயி தக்க பதிலடி கொடுத்துள்ளார்.

கனடாவில் தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் திறக்கப்பட்டதன் பின்னணியில் உள்ள அரசியல் நோக்கங்கள் குறித்து தாம் கவலையடைவதாகவும்,

உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டங்களில் இலங்கையின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக எந்த இனப்படுகொலையும் நிரூபிக்கப்படவில்லை எனவும் தவறான இனப்படுகொலை கதையைக் கனடா ஊக்குவிப்பதாகவும் நாமல் ராஜபக்ஷ எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்தப் பதிவுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் தென்னிந்தியப் பிரபல பாடகி சின்மயி “தெட் முழுப் பூசணிக்காயை ஒரே ஒரு பருக்கை சோற்றில் மறைக்கட்ரை பண்ற மூமன்ட்” எனப் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுதற்போது இணையவாசிகளின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் இதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர். (ம-4,7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

60/100



**சிம்ம ராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் ராசிக்கு 10ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் 11.05. 2025 அன்று 11 ஆம் இடத்திற்குப் பெயர்ச்சியாகிறார். எனவே தொழில் வளர்ச்சி திருப்தி தரும். வருமானமும் வாழ்க்கைத்தரமும் உயரும்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

நவக்கிரகங்களின் பார்வையால் நலம் தருபவர் குரு புனிதமடைகின்றன. நடக்காத காரியங்களை நடத்திக் காட்டுவது குருவின் அருட் பார்வைதான். அந்த அடிப்படையில் குருவின் பார்வை 3 ஆம் இடத்தில் பதிவதால் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். முக்கியப் புள்ளிகள் உதவிகரமாக இருப்பர். போட்டிக்கடை வைத்தோர் விலகுவர். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வீர்கள். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர்.

குருவின் பார்வை 5ஆம் இடத்தில் பதிவதால் பிள்ளைகள் வழியில் நல்ல நிகழ்வுகள் நடைபெறும். பிள்ளைகளின் திருமணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள். பாகப் பிரிவினை சுமுகமாக முடியும்.

பொழுது, நல்ல சந்தர்ப்பங்கள் கை கூடிவரும். நழுவிச் சென்ற வாய்ப்புகள் மீண்டும் கை கூடும். துணிந்து சில முடிவுகளை எடுத்து ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம்




செவ்வாய் என்பதால் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

10.6.2025 முதல் 7.8. 2025 வரை திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பகவான் கடக ராசிக்கு பெயர்ச்சியாகிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். குரு உச்சம் பெற்றுப் பார்ப்பது யோகம் தான் இருப்பினும் விரய ஸ்தானத்தில் இருந்து பார்க்கின்றார். எனவே சுப விரயங்கள் அதிகரிக்கும்.

உங்கள் ராசியைப் பொறுத்தவரை பஞ்சம அஷ்டமாதிபதி குரு என்பதால் 8 இற்கு அதிபதி, 12இற்கு வரும் இந்த நேரம் நல்ல நேரம் தான். விபரீத ராஜயோக அடிப்படையில் பல நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனி பகவான் கும்ப ராசியில்

## லாபத்தில் வருகிறது குரு! யோகத்தை வழங்கும் இனி!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

பகவான். அவர் உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான குரு, லாப ஸ்தானத்திற்கு வரும் பொழுது செய்தொழில் சிறப்பாக இருக்கும். திடீர் திடீரென லாபம் வந்து சேரும். குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சம்பாதிக்கும் வாய்ப்பு ஏற்படும். அயல் நாட்டு முயற்சியில் இதுவரை இருந்த தடைகள் அகலும். முன்னேற்றம் கூடும். இளைய சகோதரத்துடன் இணக்கம் ஏற்படும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாகவோ, திருமணம் சம்பந்தமாகவோ செய்த முயற்சி பலன் தரும். பணி ஓய்விற்குப் பிறகும் சிலருக்கு வேலை கிடைக்கும்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம் பணிபுரியும் இடத்தில் பாராட்டும், புகழும் கூடும். மேலதிகாரிகள் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொடுப்பர். நீண்ட தூரப் பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

குருவின் பார்வை 7ஆம் இடத்தில் பதிவதால் இல்லத்தில் நீண்ட நாட்களாக மங்கல ஓசை கேட்கவில்லையே என்ற கவலை அகலும். பிறருக்குப் பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை இப்பொழுது வந்து சேரும். ஊதிய உயர்வின் காரணமாக குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்று பணி புரிந்த தம்பதியர் இப்பொழுது சேர்ந்து பணி புரியும் வாய்ப்பு உண்டு. ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6. 2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். வாழ்க்கைத் துணை வழியே சில பிரச்சினைகள் வந்து அலை மோதும். இதுபோன்ற நேரங்களில் அனுகூல நாளில் குருவிற்குரிய சிறப்புத் தலங்களைத் தேர்ந்தெடுத்துச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

8.8.2025 முதல் 25.5. 2026 வரை புனர்பூசம் நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும்பொழுது நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். குரு உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதி என்பதால் ஒரு சில காரியங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாத நேரமிது. அனுபவஸ்தர்களின் ஆலோசனை கைகொடுக்கும்.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

08.10.2025 அன்று குரு இருந்து மீன ராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். இப்பொழுது உங்களுக்கு அஷ்டமத்துச் சனி தொடங்குகிறது. எனவே எண்ணற்ற மாற்றங்கள் வந்து சேரும். நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக இருக்கலாம். நிம்மதி கொஞ்சம் குறையும். இதுபோன்ற நேரங்களில் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த குருப்பெயர்ச்சியின் விளைவாக பொருளாதார நிலை திருப்தி தரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். உங்கள் பெயரிலேயே அசையாச் சொத்துக்கள் வாங்க முன் வருவர். கடைதிறப்பு விழா, கட்டடத் திறப்பு விழாக்கள் நடைபெறும். பிள்ளைகளின் திருமண காரியம் கைகூடும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உப்பு...

தளர்த்தி உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி ஜூன் 10ஆம் திகதி வரை உப்பு இறக்குமதிக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனூடாகத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத உப்பு மற்றும் நுகர்வோருக்குத் தேவையான அயடின் கலந்த உப்பு இறக்குமதிக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## ஓமந்தையில்...

உயிரிழந்தவராவார்.

வீதியின் மறுதிசைக்கு மாற முற்பட்ட மோட்டார் சைக்கிள் மீது விசேட அதிரடிப் படையின் வாகனம் மோதிய திலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4)


மஹஜன சம்பத
திகதி 2025.05.15
சீட்டிழுப்பு இலக்கம் 5830
X 6 9 1 4 9 4
அத சம்பத
X 1 4 9 4
சீட்டிழுப்பு இலக்கம் 405
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.05.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1860
O 08 12 29 32 O
Double Chance 68848

மெகா பவர்
திகதி 15/05/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2178
V 15 27 66 70 76

ஜய
திகதி 2025.05.15
சீட்டிழுப்பு இலக்கம் 098
W 7 7 9 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4072
சீட்டிழுப்பு திகதி 15.05.2025
W 14 33 44 65
W

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.05.15
சீட்டிழுப்பு இலக்கம் 1139
மேடம் 02 16 44 53 மேடம்
53209 10


## செம்மணி...

பிக்கப்பட்டுள்ளது.

செம்மணி - சிந்துபாத்தி மயானத்தில் கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து மனித எச்சங்கள் அவதானிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி சம்பவ இடத்தில் நீதவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக நேற்று அங்கு அகழ்வாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் நேற்று அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு, மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டன. தொடர்ந்து வரும் நாட்களில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-7,4,33)

## ஜனாதிபதி...

வாகனங்கள் நேற்று விற்பனையானதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வாகனங்கள் அனைத்தும் 10 வருட காலத்திற்குள் தயாரிக்கப்பட்டவையகும்.

அரச செலவைக் குறைத்தல் மற்றும் நிதி மேம்பாட்டை மேற்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி செயலகத்தில் இவ்வாறு வாகன ஏலம் இடம்பெற்றது.

இந்த வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக சுமார் 108 தொழிலதிபர்கள் வருகை தந்ததால் வாகனங்களுக்கான கேள்வியும் அதிகரித்திருந்தது.

நேற்று நடைபெற்ற வாகன ஏலத்தின் ஊடாக அரசுக்கு சுமார் 200 மில்லியன் ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7,4)

## இனப் படுகொலை...

ஹேரத்தின் முகநூல் பதிவிற்கான பதில் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் தமிழ்மக்களிற்கு எதிரான இனப்படுகொலையில் ஈடுபட்டது என்ற குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என உண்மையில் நீங்கள் கருதினால், சர்வதேச சுயாதீன குற்றவியல் விசாரணையை எதிர்கொள்வதற்கு - அரசாங்கம் தமிழர்களிற்கு எதிரான இனப்படுகொலையில் ஈடுபடவில்லை என்பதை நிரூபிப்பதற்கு நீங்கள் ஏன் இவ்வளவு தூரம் அச்சமடைகின்றீர்கள்? நீங்கள் ஏன் ரோம் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதில் கைச்சாத்திட்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கக் கூடாது?

உண்மை என்னவென்றால் அமைச்சரே, அரசாங்கம் உண்மையைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றது. உண்மையே நல்லிணக்கத்திற்கான ஒரே வழி. ஆனால் முன்னைய அரசாங்கங்கள் போன்று உங்கள் அரசாங்க மும் அதனை மறுக்கின்றது என்று பதிவிட்டுள்ளார். (ம-7,4)

## பேரறிவாளனின்...

வடக்கு, கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அவரின் வருகை முக்கியத்துவமிக்க ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நான்காம் நாள் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயக நிலம் எங்கும் முன்னெடுக்கப்பட்டது.

பொது அமைப்புக்கள், அரசியல் ஆதரவாளர்கள், பல்கலை மாணவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிர்நீத்தவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுக்கஞ்சியும் பரிமாறப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## பரீட்...

பரீட்சைகள் ஆணையாளராகப் பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ம-7,4)

## ஊழல்...

விடுத்ததோடு அதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கினார்.

மாகாணங்களில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் அவை தொடர்பிலான சவால்கள் குறித்து இங்கு ஆராயப்பட்டதுடன், அந்தப் பிரச்சினைகளுக்குச் சாதகமான தீர்வுகளை வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியை விட மூன்று மடங்கு நிதி மாகாண சபைகளுக்குக் கிடைத்துள்ள நிலையில் இந்த ஆண்டு மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதில் உள்ள சவால்கள் குறித்து ஆளுநர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர். அந்த நிதிகளை முறையாக முகாமைத்துவம் செய்வதன்

முக்கியத்துவம் குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் கபில ஜனக பண்டார, மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப், மத்திய மாகாண ஆளுநர் சரத் பண்டார சமரசிங்க, தென் மாகாண ஆளுநர் பந்துல ஹரிச்சந்திர, வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ குமாரசிறி வர்ணகுலசூரிய, வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த குமார விமலசிறி, வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்த லால் ரத்னசேகர, சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, ஊவா மாகாண ஆளுநர் கபில ஜெயசேகர உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ம-7,4)


உத்தியோகபூர்வ முடிவுகள்
15.05.2025 வெற்றி வாரம் 538
சுப்பர் பல் சம்பத
Q 6 6 8 9 5 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.37,245,093.20
58837
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2804
சீட்டிழுப்பு திகதி 2025.05.15 தினம் வியாழக்கிழமை
13 22 51 52 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,921,493.60
DLB

திகதி 15.05.2025 வெற்றி வாரம் 4965
சனிதா
14 26 37 71 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,676,940.80
53227
DLB

சசிரி
வெற்றி வாரம் 682
சீட்டிழுப்பு திகதி 15.05.2025
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 21 27 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4516
சீட்டிழுப்பு திகதி 15.05.2025 தினம் வியாழக்கிழமை
02 17 26 49 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,250,894.00
149200
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 03 01 26 38 65
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட்
1980
15.05.2025
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2630
சீட்டிழுப்பு திகதி: 2025.05.15
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,447,080.00
அத கோடிபதி ADA KOTIPATHI
57 62 68 74 R
136553
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியம்

வலிப்பு நோய்|கை விறைப்பு| நாட்பட்ட தலைவலி| மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு| முள்ளந்தண்டு வலி| முழங்கால், குதி வலி Sciatica| Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வாதம் நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : 0777 301 669

(1132)



## மாப்பிள்ளை தேவை

01. KKS, இந்து, 1993, பூரட்டாதி, MBBS Doctor, Swizz பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (33465)
02. கோண்டாவில், இந்து, 1987, பூராடம், BSc, Australia, citizen, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
03. கொக்குவில், இந்து, 1985 , பூரட்டாதி, B.com, Australia, citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (39972)
04. மானிப்பாய், இந்து, 1993, ஆயிலியம், MBBS, LLB, Australia citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (37015)
05. சாவகச்சேரி, இந்து, 1998, அத்தம், MSc, UK பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (51044)
06. வவுனியா - பிறவுண் ரோட், இந்து, 1991, திருவோணம், MSc, UK citizen, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (50117)
07. திருநெல்வேலி, இந்து, 1987, விசாகம், Lawyer, Solicitor, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.
08. சாவகச்சேரி, இந்து, 1983, உத்தரட்டாதி, MBA, Dubai பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (21319)
09. மானிப்பாய், இந்து, 1989, உத்தராடம், MBBS, MD Doctor, USA பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (29980)
10. சாவகச்சேரி, இந்து, 1986, மூலம், Phd, Data Scientist, USA citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.

எம்மிடம் எல்லா ஜாதியிலும், எல்லா நாட்டிலும் Unmarried மற்றும் Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

(1134)



## Village Hotel
## Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக

www.villagehotel.lk
077 544 8503

(3992)



## தேவை

யாழ். நகரில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர் மற்றும் மேற்பார்வையாளர் தேவை.

தொடர்புகளுக்கு :
077 873 8834

(C-2974)


## குருந்தூர்மலையில் கைதான விவசாயிகளின் மறியல் நீடிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குருந்தூர்மலைப் பகுதியில் கைது செய்யப்பட்ட இரு விவசாயிகளின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

மே 10ஆம் திகதி தங்களுக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்த குறித்த இரு விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் முதலில் மே 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தப்பட்ட போது, மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

(ம-4,7)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery


UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

(C-2976)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் சிவலிங்கம் லிங்கரூபன்

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எம் துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூகவலைத் தளங்களினூடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும் துண்டுப்பிரசுரம், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும் அத்துடன் 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை.

தகவல் :
குடும்பத்தினர்

(4198)

## மரண அறிவித்தல்

மலர்வு 1984 - 05 - 15



உதிர்வு 2025 - 04 - 16

### திரு.தருமரத்தினம் நிஷாந்தன்
(முன்னைநாள் கிளிநொச்சி சுகாதார திணைக்கள மலேரியா தடை இயக்க உத்தியோகத்தர்)

இல.15, சேவிஸ் வீதி, கனகாம்பிகைக் குளத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு இத்தாலியினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தருமரத்தினம் நிஷாந்தன் அவர்கள் கடந்த 16.04.2025 அன்று இத்தாலியில் இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தருமரத்தினம் மற்றும் யோகேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மகனும் இராமகிருஸ்ணன் - ஈஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் தயானாவின் பாசமிகு கணவரும் அக்ஷனின் ஆருயிர்த் தந்தையும் சோபனா, ஜெகன், ஜெயந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயவதனன், சபாரத்தினம், பத்மபிரியா, திலீபன், திவ்யா, சுஜிதா, சஜீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் திகழ்நிலவன், லோஜிதன் ஆகியோரின் அன்பு மாமாவும் அகரனின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.05.2025 இன்று வெள்ளிக்கிழமை மு.ப 9.00 மணியளவில் இல.15, சேவிஸ் வீதி, கனகாம்பிகைக் குளத்தில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் கனகாம்பிகை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.15, சேவிஸ் வீதி,
கனகாம்பிகைக்குளம், கிளிநொச்சி.

தகவல் : குடும்பத்தினர்

(C-2971)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 05.05.1957

மறைவு 16.04.2025

கடந்த 16.04.2025 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

அமரர்

### செல்வி கணபதிப்பிள்ளை கமலாம்பிகை

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 16.05.2025 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும், தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப. 10.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம். பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(C-2972)

காரைக்கலட்டி,
பருத்தித்துறை.

இங்ஙனம் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.